| මගේ අංකය<br>எனது இல ..................................................<br>My No | ඔබේ අංකය<br>உமது இல .........................................<br>Your No | දිනය<br>திகதி :.........................................<br>Date |
|---|---|---|

2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 33(9) பந்திக்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவ சபையின் அனுமதிக்கமைய வெளியிடப்படும் விதிமுறைகள் :- **2018/05**

**<u>சர்வதேச மகளீர் தின நிகழ்வும், திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டமும் - 2018</u>**

## 1. அறிமுகம்

2018 மார்ச் 08ம் திகதிய சர்வதேச மகளிர் தின நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக திரியமாதா வைப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்.

தைரியத்தாயின்/மனை அலகின் நிர்வாகத்தினூடாக சிக்கனத்திற்கு முன்னுரிமை வழங்குவதுடன் அதனை மேம்படுத்தும் நோக்குடன் சேமிப்பு வைப்புப் பிரிவினூடாக புதிய வழிகாட்டல்கள் வழங்கி அவர்களின் பொருளாதார பிரதிபலன்களை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்கு ஏற்ற விதத்தில் திரியமாதா கணக்குகளுக்கு வைப்புக்களை சேர்த்துக்கொள்வதும், புதிய கணக்குகளை ஆரம்பிப்பதும் இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம்

2.1 நாடு தழுவிய ரீதியில் அமைந்துள்ள 1074 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல் வேண்டும். இவ் வேலைத்திட்டத்தின் கீழ் திரியமாதா சேமிப்பு வைப்பு கணக்குகளுக்கு மாத்திரமே சேமிப்புக்ககளை சேகரிப்பதுடன் இதனூடாக ஒட்டுமொத்தமாக 275 மில்லியன் ரூபாவினை வைப்பாக சேகரித்தல் வேண்டும்.

2.2 ஒட்டுமொத்த இலக்கினை சமுர்த்தி வங்கிகளுக்களிடையே சமமாக பங்கிட்டு வழங்குவதுடன் ஒரு சமுர்த்தி வங்கி குறைந்தது ரூபா 250000/= ஐ வைப்பாக சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.




| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 28877** |
| | | **Hot Line :0112-889007** | | | |

2.3 நாடு பூராகவும் 20000 திரியமாதா சேமிப்புக் கணக்குகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பெண்கள் உட்பட சகல பெண்களையும் இலக்காகக் கொண்டு இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். இங்கு ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியும் புதிதாக குறைந்தது 20 திரியமாதா சேமிப்பு வைப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு இலக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.4 தேசிய மட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கும் இலக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இவ் இலக்கினை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றுவதற்கு வங்கிகளின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் சகல கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படல் வேண்டும்.

2.5 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் இலக்கினை ஒன்று சேர்ந்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் இலக்கு தயாரிக்கப்படல் வேண்டும். ( சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திற்குட்பட்ட அணைத்து வங்கிகளின் இலக்குகளையும் ஒன்று சேர்த்து)

**3. மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கால எல்லை**

**2018 மார்ச் 08ம் திகதியிலிருந்து 20** வரையான காலம் முழுவதும் மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தி இலக்கினை அடைந்துகொள்ள வேண்டும்.

**4. பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் நினைவுப் பரிசில்கள் வழங்கலும்**

4.1 சேமிப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டும் செயற்பாடுகள் கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலதிகமாக விழிப்பூட்டல்களை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கும் வங்கிகள் அதற்கான துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு வழங்குவதற்கு இடமளிக்கப்படுகின்றது. இதற்காக ஒரு சமுர்த்தி வங்கியில் இருந்து உயர்ந்த பட்சம் ரூபா 3000/= ஐ செலவு செய்ய முடியும். இதனை செலவுக் கணக்கு – வங்கிக் மேம்பாட்டு நடவடிக்கைகள் கணக்கில் பற்று வைக்கவும்.

4.2 சகல வங்கிகளுக்குமான பிரச்சார துண்டுப்பிரசுரங்களை அச்சிடும் பணிகளை சமுர்த்தி வங்கிச் சங்கம் இணைப்புச் செய்தல் வேண்டும். இருந்தும் இத் துண்டுப்பிரசுரத்தை அச்சிட்டு வழங்குவது மிகப் பிரதானமாக அமையாது.

4.3 இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் தற்போது செயற்படுத்தப்படுகின்ற திரியமாதா சேமிப்புக்கணக்குகளுக்கு அல்லது புதிய திரியமாதா கணக்கினை ஆரம்பித்து சேமிக்கின்ற தொகைக்கு அமைய உரிய கணக்குடையோனுக்கு நினைவுப் பரிசில்கள்

வழங்க முடியும். இப் பரிசுப் பொருட்களின் பொருட்டு ஒரு வங்கி சேமிக்கும் மொத்த வைப்புத் தொகையில் உயர்ந்த பட்சம் 5% க்குட்பட்ட தொகையினை வங்கி நிதியில்

இருந்து செலவு செய்ய அனுமதி உண்டு. இங்கு ஒவ்வொரு கணக்குடையோனும் மேம்பாட்டு வாரத்தினுள் வைப்புச் செய்யும் தொகைக்கு ஏற்ப மாறுபட்ட பொருத்தமான நினைவுப் பரிசில்களை வழங்குதல் தொடர்பான தீர்மானம் முகாமையாளர் உட்பட கட்டுப்பாட்டுச் சபையினரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். சில சமுர்த்தி வங்கிகள் ஒவ்வொரு கணக்குடையோனும் வைப்புச் செய்யும் தொகையில் 5% ஐ அல்லது அதைவிடக்கூடிய பெறுமதியுடைய நினைவுப் பரிசில்களை வழங்குவது அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செயற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

4.4 2018 மார்ச் 08ம் திகதியில் இருந்து 20ம் திகதி வரை திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் சேமிக்கப்படும் தொகையினை வங்கியினுள் குறைந்தது 12 மாதங்களுக்காவது தேக்கி வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நினைவுப் பரிசில்களை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் பணத்தினை வைப்புச் செய்து குறுகிய காலத்தினுள் மீளப்பெற நடவடிக்கை எடுக்கும் கணக்குடையோர்களும் உள்ளார்கள் என அறியக்கூடியதாக உள்ளது என்பதை தெரியப்படுத்துகிறேன். இன் நிலையினை தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியது முகாமையாளரின் பொறுப்பாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே இவ் விடயம் தொடர்பாக வங்கிப் பணிக்குழுவினர் விசேடமாக கவனம் செலுத்த வேண்டும்.

4.5 நினைவுப் பரிசில்களை தெரிவு செய்தல் மற்றும் கொள்வனவு செய்தல் என்பன பிரதேச செயலக கேள்விச் சபையின் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் பரிசுப்பொருட்களை தெரிவு செய்யும் போது வங்கிகளுக்கு விளம்பரம் ஏற்படக்கூடிய விதத்திலும் மற்றும் சமுர்த்தி வங்கி வேலைத்திட்டத்தின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படாத விதத்திலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.6 சமுர்த்தி வங்கிகளின் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற மதிப்பீட்டு வேலைத்திட்டம் மற்றும் தரப்படுத்தல் (GRADING) நடவடிக்கைளின் போது இவ்வாறான சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினுள் இலக்கினை பூர்த்தி செய்வதற்கு வழங்கிய ஒத்துழைப்புக்களின் மீது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

4.7 இவ் வேலைத்திட்டத்தின் கீழ் கணக்குடையோன் பரிசுப் பொருளை பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டு தமது அங்கத்தவர் சேமிப்புக் கணக்கில் உள்ள பணத்தினை திரியமாதா கணக்கிற்கு மாற்றம் செய்வதற்கு இடமளிக்ககூடாது. மேலும் இலக்கினை பூர்த்தி செய்யும் நோக்குடன் வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் கடனைப் பெற்று அப் பணத்தினை மீண்டும் திரியமாதா வைப்புக் கணக்கில் வைப்புச் செய்ய முற்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**5. முன்னேற்ற அறிக்கைகள் அனுப்புதல்**

5.1 இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தினை உரிய முறையில் பூர்த்தி செய்து முன்னேற்றத்தினை 2018.03.29ம் திகதிக்கு முன்னர் வங்கிச் சங்கத்திடம் ஒப்படைத்தல்.

5.2 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் வங்கிகளில் இருந்து பெற்றுக்கொண்ட முன்னேற்றங்களை படிவம் 02 இல் உரிய முறையில் பூர்த்தி செய்து 2018.04.05ம் திகதிக்கு முன்னர் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

5.3 மாவட்ட சமுர்த்திப் பிரிவு படிவ இலக்கம் 02 இல் உள்ளவாறு முன்னேற்றங்களை 2018.04.12ம் திகதிக்கு முன்னர் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவ சபைத் தலைவர்/
பணிப்பாளர் நாயகம்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.

TRANSLATED BY – I.ALIYAR

**இணைப்பு – 01**

2018 மார்ச் 08 சர்வதேச மகளீர் தினத்திற்கு அமைவாக செயற்படுத்திய திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்ட முன்னேற்றம்

…………………………………………………..சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி

| விபரம் | கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த மொத்த வைப்புத்தொகை (ரூபா) | வேறு |
|---|---|---|---|
| புதிதாக ஆரம்பிக்கப்பட்ட | | | |
| தற்போது செயற்படும் கணக்குகளில் சேமித்த | | | |
| மொத்தம் | | | |

- ❖ ஓவ்வொரு இலக்கிற்கும் சேமித்த மொத்த வைப்புத் தொகையினை குறிப்பிடுக.

தயாரித்தவர்

பெயர் :-……………………………..

ஒப்பம் :-……………………………..

திகதி :-……………………………..

---

**இணைப்பு – 02**

2018 மார்ச் 08 சர்வதேச மகளீர் தினத்திற்கு அமைவாக செயற்படுத்திய திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்ட முன்னேற்றம்

…………………………………………………….. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம்/ மாவட்டம்

| வங்கியீன் பெயர் | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட | | தற்போது செயற்படுத்தப்படும் கணக்கில் சேமித்த | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் எண்ணிக்கை | சேமித்த தொகை (ரூபா) | கணக்குகளின் எண்ணிக்கை | சேமித்த தொகை (ரூபா) | கணக்குகளின் எண்ணிக்கை | சேமித்த தொகை (ரூபா) |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

- ❖ சேகரித்த அதி உயர்வான வைப்புத் தொகையில் இருந்து குறைவான தொகையினை சேகரித்த வங்கி வரை வரிசை ஒழுங்கின் பிரகாரம் அறிக்கையினை தயாரிக்கவும்

தயாரித்தவர்

பெயர் :-……………………………….

ஒப்பம்   :-…………………………….

திகதி   :-……………………………..